செய்தி வெளியீடு எண். 155 நாள்: 21.03.2018

**உரிமம் இல்லாத வணிகர்கள் 80 பேர்களுக்கு மேல்நடவடிக்கை நோட்டிஸ் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் எச்சரிக்கை**

உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் சட்டம் 2006-ம் ஆண்டின் சட்டத்தின்படி தொடர்ச்சியாக உணவு வணிகம் செய்பவர்கள் கட்டாயம் உரிமம் / பதிவு செய்து கொள்ள வேண்டும். உணவு வணிகர்கள் உணவு பாதுகாப்பு பதிவு மற்றும் உரிமம் பெற 04.08.2016 வரை போதுமான அவகாசம் அளிக்கப்பட்டது. அவகாசம் வழங்கிய காலத்தில் பதிவு பெறாதவர்களுக்கு திருவள்ளூர் மாவட்டம் முழுவதும் 42 உணவு பாதுகாப்பு விழிப்புணர்வு கூட்டங்கள் நடத்தப்பட்டது. மாவட்டம் முழுவதும் உள்ள உணவகங்களில் 65% விழுக்காடு பதிவு பெறப்பட்டது. மீதமுள்ள 35% விழுக்காடு உணவு பாதுகாப்பு உரிமம் பெறப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் பதிவு மற்றும் உரிமம் பெறாத உணவு வணிகர்கள் மீது உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் சட்டம் 2006 பிரிவு 63-ன் படி ரூ.5 இலட்சம் அபராதம் மற்றும் 6 மாதம் சிறை தண்டனை விதிக்கப்படும் வாய்ப்பு உள்ளது. எனவே உணவு வணிகர்கள் அனைவரும் இதனை எச்சரிக்கையாக எடுத்துக்கொண்டு உடனடியாக பதிவு பெற அருகிலுள்ள பொது சேவை மையங்களை (CSC) அணுகி பெற்றுகொள்ளுமாறும், உரிமம் பெற உடன் விண்ணப்பித்து உரிமம் பெற்றதற்கான குறுஞ்செய்தி தங்கள் அலைபேசிக்கு வந்தவுடன் உணவு பாதுகாப்பு மாவட்ட நியமன அலுவலர் அலுவலகத்தில் காண்பித்து உணவு பாதுகாப்பு உரிம சான்றிதழ் பெற்றுகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

விண்ணப்பம் செய்பவர்கள் **www.fssai.gov.in** என்ற இணையதளத்தில் பதிவேற்றம் செய்து பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்ப கட்டணங்களை Online மூலமாகவும் செலுத்தலாம். Online மூலமாக விண்ணப்பித்தவர்கள் தகுந்த ஆவணங்களை 15 தினங்களுக்குள் திருவள்ளூர் மாவட்ட நியமன அலுவலர் அலுவலகத்தில் சமர்பிக்குமாறு கேட்டுக்கொள்ளபடுகிறார்கள். மாவட்ட நியமன அலுவலர் அலுவலகம் நெ. 54/1, ஆசூரி தெரு, DDHS வளாகம், இரண்டாம் தளம், திருவள்ளூர்-602001, தொலைபேசி: 044-27662002.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**